அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 02/2000

எனது இல. AB/15/1/1(II)
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
2000.01.15.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

<u>அரசாங்க சேவையின் செயற்திறமைபேற்றுத் தர மதிப்பீட்டுத் திட்டம்.</u>

அரசாங்க சேவையின் செயற்திறமைபேற்றுத் தர மதிப்பீட்டுத் திட்டம் செயற்படுத்துகை தொடர்பாக முறையே 1998.03.13 ஆம், 1998.04.30 ஆம், 1998.12.11 ஆம் திகதிகளில் வெளியிடப்பட்ட 07/98, 08/98(I), 08/98(II) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பால், மற்றும் விசேடமாகப் பயனாளிகள் தொடர்பான 1998.12.23 ஆம் திகதிய 28/98 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. இச் செயற்திறமைபேற்றுத் தர மதிப்பீட்டுத் திட்டத்தின் நோக்கங்களை, சரியான செயற்றிறன்மிக்க நோக்கி அரசாங்க ஊழியர்களின் அச்சேவைக் கட்டமைப்பைத் திட்டமிடல் அச்செயற்றிறன்களை அடைவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்தல், குறித்த காலப்பகுதியில் முன்னர் திட்டமிடப்பட்ட செயற்றிறன்களை அடையப்பெற்றுள்ளனவா என மதிப்பீடு செய்தலுமாகும். இவ்வாறு அமைக்கப்பட்ட இலக்கை திறமையுடனான நடைமுறைப்படுத்தலை சேவை முழுமைக்கும் உள்ள மேம்படுத்தலைத்தே எதிர்பார்க்கப்படுகின்றது.

03. இது தொடர்பாக ஒரு தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று அலுவலர்களுக்கு நடத்தப்பட்டமையுடன், செயற்திறமைபேற்றுத் தர மதிப்பீட்டுத் திட்டம் தங்கள் நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வகையிலுள்ளது என நம்பப்படுகின்றது. தங்கள் நிலையத்தில் கூடிய விளைதிறனுடன் முகாமைத்துவம் நடைபெறுவதை உறுதி செய்யுமுகமாக 2000 ஆம் ஆண்டில் கூடிய விளைதிறனுள்ள வகையில் இத்திட்டத்தை செயற்படுத்தப்படுவதற்கு தங்களின் நேரடி கவனத்தைச் செலுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 28/98 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்

நியதிகளுக்கமைய, அலுவலர்களின் பணி பற்றிய விபரங்கள் தயாரித்தலுடன் இச் செயல்நிறைவேற்றத் தர திட்டங்களை அர்த்தமுள்ளவையாகத் தயாரிக்கப் படலாம். அதற்கமைய தயவுசெய்து 08/98 (11) ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட மாதிரி உருவில் 2000 ஆம் ஆண்டுக்கான செயல்நிறைவேற்றத் தர மதிப்பீட்டுத் திட்டத்தை 2000.01.31 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிப்பதற்கு பதவிநிலைத் தரத்திலுள்ள தங்கள் அலுவலர்கள் அனைவருக்கும் அறிவுறுத்துவதற்கு தயவுசெய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்.

04. எதிர்காலத்தில் செயல்நிறைவேற்றத் தர மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு இவ்வமைச்சினால் மேற்கொள்ளப்படும். தங்கள் அமைச்சில்/திணைக்களத்தில்/நிலையத்தில் உள்ள சிரேஷ்ட உதவிச் செயலாளர்/பிரதித் தலைவர் மட்ட அல்லது அதற்கு மேற்பட்ட மட்ட அலுவலரை இந்நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு தயவுசெய்து பெயர் குறித்து நியமித்து எனக்கு 2000.01.31 ஆம் திகதிக்கு முன் நியமிக்கப்பட்ட அலுவலரின் பெயரை எனக்கு அறிவிக்கவும்.

05. அரசாங்க சேவையில் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்தின் பொருட்டு விடுக்கப்பட்ட 1997.02.12 ஆம் திகதிய 09/97 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. தங்கள் அமைச்சில் செயல்நிறைவேற்றத் தர மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளும் செயற்படுத்தப்படவேண்டியதன் தேவைப்பாட்டினையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒப்பம்.: மஹிந்த மத்தசேன
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

நச/-